RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1855

OPEN ACCESS

# வள்ளுவரின் அரசியல் கொள்கைகள்

**வீ. இரஞ்சித் [அ, *], பொன். கதிரேசன் [அ]**

[அ] தமிழாய்வுத் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைகழகம் இணைவப் பெற்றது), மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா.

# Valluvar's Political Principles

**V. Ranjith [a, *], Pon. Kathiresan [a]**

[a] Department of Tamil, Ganesar College of Arts and Science, (Affiliated to Bharathidasan University), Melaisivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author: veeraranjith1991@gmail.com

Received: 18-07-2022
Revised: 23-09-2022
Accepted: 11-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Thirukkural, the world-famous book contains many principles. Thirukkural is a book that makes a person to think about political science from a diverse perspective. This article explains various the various political principles in Thirukkural. Politics is an expression of social science. Politics is a term that refers to the process of making decision among the group of people. Although politics generally refers to the functioning of governmental institutions, it is worth to note that that politics is actually found in the interactions of all human groups, including office, education, and religious institutions. Thirukkural is a suitable book to give a clear definition and explanation of diverse theories such as divine theory, strength theory, social contract theory, relationship theory, evolution theory and force theory. This article examines the three chapters Arathuppal, Porutpal and Kamathuppal of Thirukkural which supports the theoretical thoughts of politics, and explains the political ideas.

**Keywords:** Politics, Office, Education, Thirukkural, Social Contract Theory

## முன்னுரை

திருக்குறளில் அரசியல் அறிவியல் பற்றிய முழுமையான விளக்கத்தை அறிய முடிகிறது. அரிஸ்டாட்டில், பிளேட்டோ, காந்தி ஆகியோரின் அரசியல் கோட்பாட்டு தத்துவங்களையும் ஒப்பாய்வு செய்கின்ற வகையில் திருக்குறள் அமைந்துள்ளது. மனிதன் விலங்கு நிலையிலிருந்து மாறி மனிதர்களாக மாறுவதற்கு அறிவியல் ரீதியான மரபுவழி முயற்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் அறிவியலை முதன்முதலில் வளர்ச்சி அடையச் செய்தவர்கள் கிரேக்கர்கள். திருக்குறளையும் அரிஸ்டாட்டில் எழுதிய அரசியல் என்னும் நூலையும் ஒப்பீட்டு நவீன அரசியலை அறிந்துகொள்ள முடிகிறது. அரசனின் கடமைகள், அமைச்சரின் கடமைகள், நல்ல அரசுக்கு உரிய இலக்கணம், பொது வருவாய், நிதி நிர்வாகம், உள்ளாட்சி நிர்வாகம் ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகளைத் திருக்குறளில் நன்கு அறிய முடிகிறது. பழங்கால அரசியலைப் பற்றியும் தற்கால நவீன அரசியலைப் பற்றியும் திருக்குறளில் அறியலாம். அறத்தின் ஆட்சியை அறத்துப்பால் கூறுகிறது. அரசரின் பன்முக ஆட்சியை பொருட்பால் எடுத்துரைக்கிறது. உறவு வழிக்கோட்பாட்டு அரசியலை இன்பத்துப்பால் எடுத்துரைக்கிறது. அரசியல் தலைமை கொண்டவர்கள் பொதுமக்களை எப்படி அணுக வேண்டும் என்னும் தத்துவார்த்தமான அரசியல் அணுகுமுறைகளைத் திருவள்ளுவர் மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளார். திருவள்ளுவர் வழியாக நின்று திருக்குறளில் அமைந்துள்ள அரசியல் கோட்பாடுகளை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## தெய்வீகக் கோட்பாடு

திருக்குறளில் பொருட்பாலில் அரசின் தோற்றக் கோட்பாடுகள் பற்றி சிந்திக்கின்ற பொழுது தெய்வீகக் கோட்பாட்டுச் சிந்தனைகளைத் தந்துள்ளார் திருவள்ளுவர். அரசு என்னும் புனிதமான நிறுவனத்தில் கடவுள் அரசனை ஆட்சி புரிவதற்கு அனுப்பி வைத்து மக்களைக் காக்கின்றான். இதை உணர்த்தும் பொருட்டு இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். இறைவனுக்கு நிகராக இருந்து மக்களை சமமாகக் கருதி ஆட்சி செய்ய வேண்டும் இதுவே அரசனின் முதல் கடமை என்பதை இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. இறைமாட்சி என்பது ராஜ நீதியைச் சொல்லுதல் என்று பரிதிமாற்கலைஞர் குறிப்பிடுவார். ராஜனின் நற்குண, நற்செய்கைகளைக் குறிப்பிடுவது இறைமாட்சி என்பதை பரிமேலழகரும் உணர்த்துவார். அரசன் கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் கலந்து இருப்பதால் அவருக்கு இறை என்று பெயர். படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்னும் ஆறு பொருளையும் உடையவன் அரசர்களுக்கெல்லாம் இளமையாக இருப்பான். குடி என்றால் நாட்டு வாழ் மக்களின் பெயர் என்பதாகும். கூர் என்றால் பயிர்கள் என்று அர்த்தம். அரண் என்றால் கோட்டை என்று அர்த்தம். இப்படி நாட்டில் வாழ்கின்ற மக்களையும் உயிர் வளர்கின்ற பயிர்களையும் அரண்மனை போல் காக்கின்ற அரசன் இறைவனுக்குச் சமமானவன் என்பதை இங்கே உணர்த்திக் காட்டுகிறார் வள்ளுவர். இதனை,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்பதன் வழியாக ஈகை குணம் கொண்டவன் இறைவனுக்குச் சமமானவன் என்பதை அறிய முடிகிறது. அரசனுக்கு வீரத்துடன் கொடை வள்ளல் தன்மையும் அறிவும் ஊக்கமும் இருக்க வேண்டும் (Parimelzhagar, 2008).

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்

வழியாகத் தெய்வீகக் கோட்பாட்டை அமைத்துத் தந்துள்ளார் வள்ளுவர். தான் முறைசெய்து பிறர் வாடாமல் காத்தலைச் செய்யும் அரசன் பிறப்பால் மகனாகவும் செயலால் மக்கள் கடவுளாகவும் வைக்கப்படுவார் என்று பரிமேலழகர் எடுத்துரைக்கிறார் (Parimelzhagar, 2008). இதையேதான் அரசு முறை செய்க என்று ஐங்குறுநூறு பாடல் 8 -2 கூறுகிறது. இக்கருத்தை,

"குலமகட்குத் தெய்வம் கொழுநனை மன்ற

புதல்வருக்கு தந்தையும் தாயும் --அறவோர்க்கு

அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்

இலை முகப்பைம்பூண் இறை"

என்று நீதிநெறி எடுத்துரைக்கிறது (Kathir Murugu, 2007).

முறைசெய்து என்றால் குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் அவர்கள் செங்கோல் முறைமையில் தண்டிக்கப்பட்டு நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். பிறர் குற்றம் பாராட்டினாலும் அதைப் பொருட்படுத்தாமல் மக்களைக் காக்கின்ற கடமையில் செயல்பட வேண்டும். அரசனுக்கு இறைமாட்சி குணம் முதலில் வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அதிகாரத்தை முதலில் படைத்துக் காட்டுகிறார் வள்ளுவர். இத்தகைய ஆட்சி அரசன் செய்தால் வேந்தர்க்கு ஒளி என்று குறிப்பிடுகிறார் பரிமேலழகர். ஆகவே பொருட்பாலில் 39 வது அதிகாரம் இறைமாட்சி குறிப்பிடுவது படைகுடி அஞ்சாமை தூங்காமை அரண் காத்தல் முறைசெய்து மக்களைக் காத்தல் அழித்தல் குற்றம் பொறுத்தல் வல்லரசினை உருவாக்குதல் ஆகிய பண்புகளை அரசன் பெற்று ஆட்சி செய்ய வேண்டும் என்பதை இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது (Parimelzhagar, 2008).

## வலிமைக் கோட்பாடு

திருக்குறளில் பொருட்பாலில் நாற்பத்து எட்டாவது அதிகாரமாக வலியறிதல் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் தோற்றம் கோட்பாடுகளில் வலிமை கோட்பாடு என்பதை இந்த அதிகாரத்தின் வழியாக விளக்க முடிகிறது. ஒரு நாட்டின் அரசு என்பது அந்த நாட்டின் வலிமையை படைகளால் மட்டுமே அமைக்க முடியும் என்பதை இந்த அதிகாரம் எடுத்துரைக்கிறது. அசோகர், ஹிட்லர், நெப்போலியன், அவுரங்கசீப் போன்ற வலிமையான ஆட்சியைத் தந்ததற்கு வலிமையான படை அறிவைப் பெற்றிருந்தனர் வெற்றி பெற்றனர். வலிமையான அரசால் தான் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற முடியும். அரசின் ஆணை உரிமையை முழுமையாக செயல்படுத்த முடியும். வழி நடத்துதல் வலிமையாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் வலியறிதல் அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார். இதனை,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல்"

வழியாக வலிமையை நமக்கு உணர்த்துகிறார் வள்ளுவர் (Parimelzhagar, 2008). அதாவது செயலின் வலிமையை முதலில் உணர வேண்டும் அதன் பிறகு தன்னுடைய வலிமையை நன்கு அறிந்து வைத்துக்கொள்ளல் வேண்டும். தொடர்ந்து பகைவனின் வலிமையை அறிந்து அதற்கேற்றார் போல செயல்பட வேண்டும். நம்முடைய அரசாட்சிக்கு துணை செய்பவர்களின் வலிமையையும் நன்கு ஆராய்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் இத்தகைய வலிமைகளை அறிந்துதான் அரசாட்சி என்னும் மக்கள் செயலை செய்ய வேண்டும் என்பதை வள்ளுவர் வகைப்படுத்தி காட்டுகிறார். தமக்குள்ள வருவாய் அளவை அறிந்து அதற்கேற்ப கொடுக்க வேண்டும் அங்கனம் ஈவது செல்வத்தை பாதுகாக்கும் வழியாகும். தன் செல்வத்தின் அளவை ஆராய்ந்து பாராமல் பிறருக்கு உதவி செய்யும் தன்மையால் ஒருவனது செல்வத்தின் அளவு விரைவில் அழிந்துவிடும். ஆகவே ஆக்கமும் அழிவும் அரசனின் வலிமையைப் பொருத்து என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர்

## சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு

திருக்குறளில் பொருட்பாலில் பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்துசெயல்வகை, ஒற்றாடல் முதலிய பல்வேறு அதிகாரங்களின் வழியாக சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டுச் சிந்தனைகளை அறிய முடிகிறது. திருக்குறளில் 45-ஆவது அதிகாரத்தில் பெரியாரைத் துணைக்கோடல் பற்றிய சிந்தனை இக்கோட்பாட்டிற்கு வழிவகுக்கிறது. சமுதாயத்தில் உள்ள அறிவு மிகுந்த பெரியவர்களை துணை கொண்டு ஆட்சி செய்ய வேண்டும். மக்களின் மக்களாக இருக்கின்ற அறிவில் மூத்த பெரியவர்களை ஆட்சியின் ஆலோசனை வழிகாட்டுதலுக்கு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. அறிவாலும் செயலாலும் பெரியாரைத் துணை கொள்ளுதல் வேண்டும் தீநெறி விலக்கி நன்னெறி செலுத்துவதற்கு பேரறிவு உடையவர்கள் துணை வேண்டும். இதனை,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

திறனறிந்து தேர்ந்து கொளல்"

வழியாக இதனை அறியலாம் (Parimelzhagar, 2008). கல்வி கேள்விகளில் சிறந்த பெரியவர்கள் துணைகொண்டு ஆட்சி செய்கின்ற பொழுது சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் மிகுந்த நற்பயனைத் தரமுடியும்.

பெரியவர்களைத் துணைகொள்ள வேண்டும் அதே சமயத்தில் தீவினை உளராகிய சிறியவர்களிடம் சேராமை வேண்டும் என்பதால்தான் பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரத்திற்குப் பிறகு சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தை அமைத்துத் தந்துள்ளார் வள்ளுவர். அரசாட்சி செய்யும் மன்னர் மக்களின் தேவை அறிந்து சேவை செய்ய வேண்டும். பகைவர்களின் திறம் அறிந்து ஆட்சி செய்வான். குற்றம் செய்வோரை கண்டறிந்து தண்டித்து ஆட்சி செய்வான். இப்படி நல்லவர்களும்

தீயவர்களும் இருக்கின்ற சமுதாயத்தில் அன்பான அணுகுமுறை என்னும் ஆட்சி ஒப்பந்தம் என்பது இயற்கை அரசாட்சியின் வழியில் அமைகின்றது. இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும் என்னும் சிந்தனையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதே கருத்தை தான் குறுந்தொகை பாடல் 58 இடிக்குங் கேளிர் என்று கூறுகின்றது.

திருக்குறள் 46 வது அதிகாரம் சிற்றினஞ் சேராமை வழியாக சிறிய குணம் கொண்ட சிறியவர் இடம் நட்பு வைத்துக்கொள்ள கூடாது என்பதை எடுத்துரைக்கிறது. குறிப்பாக காமுகர் சூதாடிகள் மக்களைத் துன்புறுத்தும் தீய வன்முறையாளர்கள் ஆகியோரிடம் சேர்தல் கூடாது. தீயோர் கூட்டத்தைச் சேராது இருத்தல் பெருமை தரும். மடையனுக்கு மறுமொழி இல்லை என்னும் பழமொழி சிற்றினத்தின் குணத்தை எடுத்துரைக்கிறது. நிலத்தின் தன்மைக்கேற்ப நீர் தன்னுடைய தன்மையை மாற்றி பயன் தருவது போல மக்களின் அறிவு இடத்தை அறிந்து அதற்கேற்றார் போல நன்மையை தருபவன் மிகச்சிறந்த அரசனாவான். இதனை,

"இனம் தீதெனினும் இயல்புடையார் கேண்மை

மனம் தீதாம் பக்கம் அரிது"

என்னும் நாலடியார் எடுத்துரைக்கிறது (Gowmareeswari, 2010). இனம் இனத்தோடு தான் சேரும். தான் சேர்ந்த இனத்தின் தொழிலையே மனம் செய்யும். செயற்கை அறிவு மனத்திலுள்ள இயற்கை அறிவு போல காட்டினாலும் உள்ளபடி இனத்தால் ஆன அறிவே மெய்யானதாகும். யோக்கியவான் பாக்கியம் பிள்ளைகளே தெரியும் என்னும் பழமொழி சிந்திக்கத்தக்கது.

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்

எல்லாப் புகழும் தரும்

வழியாக அறியமுடிகிறது (Parimelzhagar, 2008). மெய்மையே பட்டாங்கு அறம் உரைக்கும் பண்புடை யாளரே நட்டார் எனப்படுவார் என்று அறநெறிச்சாரம் கூறுகின்றது. மன நலம் ஒன்றே மறுமைப் பயன் நல்கும் என்பதையும் வள்ளுவர் சுட்டுகிறார். தீயாரோடு தீயின்மின் என்று வளையாபதி பாடல் 16 கூறுவதுபோல தீயாரைக் காண்பதுவும் தீதே என்ற சிந்தனைக்கு ஏற்பச் சிறியவரின் சிறுமையையும் பெரியவரின் பெருமையையும் இங்கே உணர முடிகிறது.

## உறவு வழி கோட்பாடு

திருக்குறளின் தந்தை வழியாகவும் தாய் வழியாகவும் சுற்றுகின்ற குடும்பமாகத் திகழ்கிறது. குடும்பத்தின் விரிவாக்கம் சமூக நிறுவனமாக மாறுகிறது சமூக நிறுவனங்கள் இணைந்து அரசியல் அமைப்பின் தோற்றத்தை உருவாக்குகிறது. குடும்பமே அரசாக வளர்ச்சி அடைந்த நிலையை மையமாக வைத்து ஒரு வழி கோட்பாட்டை அமைக்க திருக்குறளில் சுற்றந்தழால் என்னும் அதிகாரத்தில் தாய் தந்தை வழி குடும்பப் பிணைப்பை அறிய முடிகிறது. குடும்பத்தில் ஒருவன் வறுமையால் இருந்த போதிலும் அவனிடம் அன்பு இருக்கின்ற பொழுது சுற்றத்தார்கள் இயல்பாக வந்து ஒன்று சேர்வர். அதைப்போலத்தான் ஒரு குடும்பத்தின் தலைவன் இருப்பதைப் போல ஒரு நாட்டின் அரசனும் இருக்க வேண்டும். ஒருவன் செல்வம் பெற்றதனால் அடையக் கூடிய நன்மை யாது என்றால் தன் சுற்றத்தார் தான் புலப்படும் வகையில் அவர்களை தழுவி வாழ்தல் ஆகும் என்பதையும் மன்னர் புரிந்து கொள்ள வேண்டும். உதவி செய்தும் இனிமையாக பேசியும் வாழ்பவனே உறவினர் சூழ்ந்து இருப்பர்.

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்

அதுநோக்கி வாழ்வார் பலர்"

வழியாக அறியமுடிகிறது (Parimelzhagar, 2008).

## பரிணாம வளர்ச்சி கோட்பாடு

அரசின் பரிணாம வளர்ச்சி முறையில் ரத்த பந்தம் அல்லது குருதி தொடர்புடைய உறவு பற்றிய சிந்தனைகள் திருக்குறளில் காணப்படுகிறது. இல்லற இயலில் மக்கட்பேறு அதிகாரத்தில் தந்தை, மகன், தாய் சார்ந்த உறவுகளை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர். குழந்தையின் இளமைப் பருவத்தின் பெருமையைக் கூறுகிறார். கலைச்சொற்களின் செவிக்கு இன்பத்தைத் தருகிறார். ஒரு தந்தை தன்னுடைய மகனுக்குச் செய்கின்ற உதவி என்னவென்றால் கற்றோர் அவையில் முதன்மை பெற்றவனாக இருக்கச் செய்தல் என்பதாகும். அதேபோல ஒரு தாய்க்கு தன் மகனை சான்றோன் எனக் கேட்கும் படியான கூற்றுகளை அவள் கேட்க வேண்டும். தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் (குறள். 67) மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல் (குறள். 70) ஆகிய இரண்டு குறட்பாக்கள் மூலமாக குருதி தொடர்பு உறவினை அறிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

திருக்குறளில் பல்வேறு அதிகாரங்களின் கருத்தியலை வைத்துக்கொண்டு அரசின் தோற்ற கோட்பாடுகளை உருவாக்கமுடியும் அரசியல் கோட்பாடுகள் என்னும் நூலில் ஆர் தங்கராஜ் பல்வேறு அத்தியாயங்களை படைத்துக் காட்டுகிறார் அரசின் தோற்ற கோட்பாடுகளை தெளிவாக விளக்கும் விதத்தை திருக்குறள் வழியாக மேலும் அறிய முடிகிறது. மு. வரதராசன் எழுதிய அறமும் அரசியலும் என்னும் நூல் வழியாக கடமை நம்பிக்கை உரிமை என்னும் அடிப்படையிலான அரசியல் கோட்பாடுகளை அறிந்து கொள்வதற்கு திருக்குறளை மையம் கொண்டு அணுக முடிகிறது. செங்கோன்மை நிறைந்த அரசியலை அறிந்து கொள்வதற்கும் ஆராய்வதற்கும் திருக்குறள் மையம் கொண்டு வழிகாட்டுகிறது. திருக்குறள் வழியாக தெய்வீக கோட்பாடு வலிமை கோட்பாடு சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு உறவுகள் கோட்பாடு பரிணாம வளர்ச்சி கோட்பாடு ஆகிய கோட்பாட்டு சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசின் மிகப்பெரிய கட்டமைப்பில் பல்வேறு வகைப்படுத்தப்பட்ட கருத்தியலை கொண்டு அரசியல் தோற்ற கோட்பாடுகளை அறிந்து கொள்ள முடிகிறது. பன்முக நோக்கில் அரசியலை புரிந்து கொள்வதற்கு திருவள்ளுவர் என்னும் அரசியல் சாணக்கியரின் சிந்தனைகள் தற்கால ஆய்வாளர்களுக்கு பெரிதும் பயன்படுகிறது. அரசுக்கும் மக்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## References

Gowmareeswari, S. (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Kathir Murugu (2007) Needhi Neri Villakkam, Saratha Pathippagam, Chennai, India.

Parimelzhagar (2008) Thirukkural Moolamum uraiyum, Saratha Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License